மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது 'இல்லை' என்று சொன்னார்கள். இப்போது நம் அரசாங்கம் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிப்பது, நிறைய மின்சார பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்ற முறையில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தாலும், புதிய தொழிற்சாலைகள் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிற காரணத்தாலும், எல்லா ஹைட்ரோ ஸ்கீம்களையும்—தண்ணீரைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்து விட்டபடியாலும், இப்படிப்பட்ட தெர்மல் ஸ்டேஷன்களை கோயம்புத்தூரில் இல்லாவிட்டாலும், தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்கான வகையில் நிறைய தெர்மல் ஸ்டேஷன்களை அமைக்க அரசு திட்டங்களை ஏற்படுத்தி செயல்பட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நிறைய அனல் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அனல் மின்சார அமைப்புகள் மிகவும் சக்திவாய்ந்த இயந்திரங்களால் இயங்கப்படுவதாக அறிகிறோம். எண்ணூரில் இருக்கும் அனல் மின்சார நிலையத்தை இந்தச் சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்கள் போய்ப் பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எப்போதும் போய்ப் பார்க்கலாம்.

இரவு நேரப் பேருந்துப் பணிகள்

*** 372 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் நள்ளிரவு பஸ்கள் எந்தெந்த ரூட்டுகளில் விடப்படுகின்றன ?

1972 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் 15 பேருந்துகள் இரவு நேரங்களில் கீழ்க்கண்ட 13 வழித்தடங்களில் செல்கின்றன :—

தங்கசாலை—எண்ணூர் ;

பிராட்வே—அம்பத்தூர் தொழிற்பேட்டை ;

தங்கசாலை—டன்லப் ;

திருவல்லிக்கேணி—இ. பெ. தொழிற்சாலை ;

இ. பெ. தொழிற்சாலை—பாரிமுனை ;

உயர்நீதிமன்றம்—டன்லப் ;

டன்லப்—விவேகானந்தர் இல்லம் ;

சுங்கச் சாவடி—திருவல்லிக்கேணி ;

மூலக்கடை—திருவல்லிக்கேணி ;

மூலக்கடை—அண்ணாசாலை ;

திரு. வி. க. நகர்—விவேகானந்தர் இல்லம் ;

அண்ணாசாலை—அடையாறு ;

அண்ணா சாலை—சைதாப்பேட்டை.

* 373 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the night Decker Bus going from Madras to Tiruchirappalli met with an accident on 22nd August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 22—8—1971-ல் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் இரண்டடுக்குப் பேருந்து மாமண்டூரைக் கடந்து 65/2 கிலோ மீட்டர் கல்லுக்கும் 65/4 கிலோ மீட்டர் கல்லுக்கும் இடையில் சென்று கொண்டிருந்தபோது சென்னையை நோக்கி எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த தனியார் லாரி ஒன்றின் வலப் பக்கத்தில் மோதியது. அப்போது மழை தூரிக் கொண்டிருந்தது. எதிரே பொருட்கள் மங்கலாகத் தெரிந்தன. அன்றியும் இரு சைக்கிள் வண்டிக்காரர்கள் பேருந்துக்கு முந்திச் சென்று கொண்டிருந்தனர். விபத்து நேரிடுவதைத் தவிர்ப்பதற்காக அரசு போக்குவரத்து அவ்வோட்டுநர் மிகவும் வலப்பக்க